## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஏழாம் பத்து

## எட்டாம் திருமொழி - செங்கமலம்
## திருவழுந்தூர் 4

** செங்கமலத் திருமகளும் புவியும் * செம்பொன்
திருவடியின் இணை வருட முனிவர் ஏத்த *
வங்க மலி தடங்கடலுள் அனந்தன் என்னும் *
வரி அரவின் அணைத் துயின்ற மாயோன் காண்மின் **
எங்கு மலி நிறை புகழ் நால் வேதம் * ஐந்து
வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை *
அங்கமலத்து அயன் அனையார் பயிலும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 1

முன் இவ்வுலகு ஏழும் இருள் மண்டி உண்ண *
முனிவரொடு தானவர்கள் திசைப்ப * வந்து
பன்னு கலை நால் வேதப் பொருளை எல்லாம் *
பரிமுகமாய் அருளிய எம் பரமன் காண்மின் **
செந்நெல் மலி கதிர்க் கவரி வீசச் * சங்கம்
அவை முரலச் செங்கமல மலரை ஏறி *
அன்னம் மலி பெடையோடும் அமரும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 2

குலத் தலைய மத வேழம் பொய்கை புக்குக் *
கோள் முதலை பிடிக்க அதற்கு அனுங்கி நின்று *
நிலத் திகழும் மலர்ச் சுடரேய் சோதீ! என்ன *
நெஞ்சிடர் தீர்த்து அருளிய என் நிமலன் காண்மின் **
மலைத் திகழ் சந்தகில் கனக மணியும் கொண்டு *
வந்துந்தி வயல்கள் தொறும் மடைகள் பாய *
அலைத்து வரும் பொன்னி வளம் பெருகும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 3

சிலம்பு முதல் கலன் அணிந்தோர் செங்கண் குன்றம் *
திகழ்ந்தது எனத் திருவுருவம் பன்றி ஆகி *
இலங்கு புவி மடந்தை தனை இடந்து புல்கி *
எயிற்றிடை வைத்து அருளிய எம் ஈசன் காண்மின் **
புலம்பு சிறை வண்டொலிப்பப் பூகம் தொக்க *
பொழில்கள் தொறும் குயில் கூவ மயில்கள் ஆல *
அலம்பு திரைப் புனல் புடை சூழ்ந்து அழகார் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 4

சின மேவும் அடல் அரியின் உருவம் ஆகித் *
திறல் மேவும் இரணியனது ஆகம் கீண்டு *
மன மேவு வஞ்சனையால் வந்த பேய்ச்சி *
மாள உயிர் வவ்விய எம் மாயோன் காண்மின் **
இன மேவு வரிவளைக் கை ஏந்தும் கோவை *
ஏய்வாய மரகதம் போல் கிளியின் இன்சொல் *
அன மேவு நடை மடவார் பயிலும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 5

வானவர் தம் துயர் தீர வந்து தோன்றி *
மாண் உருவாய் மூவடி மாவலியை வேண்டி *
தான் அமர ஏழ் உலகும் அளந்த வென்றித் *
தனி முதல் சக்கரப் படை என் தலைவன் காண்மின் **
தேன் அமரும் பொழில் தழுவும் எழில் கொள் வீதிச் *
செழுமாட மாளிகைகள் கூடம் தோறும் *
ஆன தொல் சீர் மறையாளர் பயிலும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 6

பந்தணைந்த மெல்விரலாள் சீதைக்காகிப் *
பகலவன் மீது இயங்காத இலங்கை வேந்தன் *
அந்தமில் திண்கரம் சிரங்கள் புரண்டு வீழ *
அடுகணையால் எய்துகந்த அம்மான் காண்மின் **
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர் *
திசைமுகனே அனையவர்கள் செம்மை மிக்க *
அந்தணர் தம் ஆகுதியின் புகை ஆர் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 7

கும்ப மிகு மத வேழம் குலையக் கொம்பு
பறித்து * மழ விடை அடர்த்துக் குரவை கோத்து *
வம்பவிழும் மலர்க் குழலாள் ஆய்ச்சி வைத்த *
தயிர் வெண்ணெய் உண்டுகந்த மாயோன் காண்மின் **
செம்பவள மரதகம் நன்முத்தம் காட்டத் *
திகழ் பூகம் கதலி பல வள மிக்கு எங்கும் *
அம்பொன் மதிள் பொழில் புடை சூழ்ந்து அழகார் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 8

ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும் *
ஒண்கரியும் உருள்சகடும் உடையச் செற்ற *
நீடேறு பெருவலித் தோள் உடைய வென்றி *
நிலவு புகழ் நேமி அங்கை நெடியோன் காண்மின் **
சேடேறு பொழில் தழுவும் எழில் கொள் வீதித் *
திருவிழவில் மணி அணிந்த திண்ணை தோறும் *
ஆடேறு மலர்க் குழலார் பயிலும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 9

** பன்றியாய் மீனாகி அரியாய்ப் * பாரைப்
படைத்துக் காத்து உண்டுமிழ்ந்த பரமன் தன்னை *
அன்று அமரர்க்கு அதிபதியும் அயனும் சேயும் *
அடி பணிய அணி அழுந்தூர் நின்ற கோவை **
கன்றி நெடுவேல் வலவன் ஆலி நாடன் *
கலிகன்றி ஒலி செய்த இன்பப் பாடல் *
ஒன்றினொடு நான்கும் ஓரைந்தும் வல்லார் *
ஒலிகடல் சூழ் உலகாளும் உம்பர் தாமே 10

**அடிவரவு:** செங்கமலம் முன் குலம் சிலம்பு வானவர் பந்து கும்பம் ஊடேறு பன்றி கள்ளம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**